**செய்தி வெளியீடு எண் : 489** **நாள்: 29.03.2022**

## செய்தி வெளியீடு

## பெருங்குடியில் அமேசான் நிறுவனத்தின் அலுவலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று(29.3.2022) பெருங்குடி, உலக வர்த்தக மையத்தில் அமைக்கப்பட்டுள்ள அமேசான் நிறுவனத்தின் மிகப் பெரிய அலுவலகத்தை திறந்து வைத்தார்.

அமேசான் நிறுவனம் முதன்முதலில் தமிழ்நாட்டில் 50 பணியாளர்களுடன் தொடங்கப்பட்டு, இன்று 14,000 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. பெருங்குடியில் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள அமேசான் நிறுவனத்தின் மிகப் பெரிய அலுவலகமானது, 8.23 இலட்சம் சதுர அடி பரப்பளவில், 18 தளங்களுடன், 6000 பணியாளர்கள் பணிபுரியும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டில் அமேசான் நிறுவனத்தின் நான்காவது அலுவலகம் ஆகும்.

அமேசான் நிறுவனத்தின் இந்த முதலீடு குறித்து வாழ்த்து தெரிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் சிறப்பான உள்கட்டமைப்பு வளர்ச்சி, முதலீட்டிற்கு உகந்த அரசின் கொள்கைகள், மாநிலத்தில் உள்ள திறமையாளர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன என்றும், அமேசான் நிறுவனம் இந்தியாவின் புதிய அலுவலகத்தை சென்னையில் தொடங்குவது மாநிலப் பொருளாதாரத்தில் பன்மடங்கு நல்விளைவை ஏற்படுத்தும் என்று நம்புகிறோம் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், விரிவாக்கம் மற்றும் முதலீடு நமது மாநிலத்தின் பொருளாதார, சமூக நல்வாழ்வை இணைக்கும் என்றும், அமேசான் இந்தியா நிறுவனத்திடமிருந்து இந்த வளர்ச்சியை நாங்கள் வரவேற்கிறோம், அவர்களின் புதிய அலுவலகத்தைத் தொடங்குவதற்கு வாழ்த்துகிறோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ்,தகவல் தொழில்நுட்பத் துறை முதன்மைச் செயலாளர் திரு. நீரஜ் மிட்டல், இ.ஆ.ப., அமேசான் நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு. சேட்டன் கிருஷ்ணசாமி, அமேசான் – Global Real Estate and Facilities இயக்குநர் திரு. வினோத் மேத்யூஸ் மற்றும் அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமேசான் நிறுவனத்தின் மிகப் பெரிய அலுவலகத்தை திறந்தது குறித்து வெளியிட்டுள்ள டிவிட்டர் பதிவு:**

தமிழ்நாட்டில் அமேசான் நிறுவனத்தின் மிகப்பெரிய அலுவலகமும், இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய அலுவலகமுமான இவ்வலுவலகத்தை திறந்து வைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இது ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கிய தமிழகப் பயணத்தின் மற்றொரு மைல்கல் ஆகும். தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு விரிவாக்கம் ஆகியவற்றிற்கான அமேசான் நிறுவனத்தின் தொடர்ச்சியான முயற்சிகளை எதிர்நோக்குகிறோம்

I am very happy to inaugurate Amazon’s largest office facility in Tamil Nadu and the second largest in India. Another milestone in TN’s journey towards being a One Trillion Dollar economy! Look forward to Amazon’s expansion in hardware and software sectors in Tamil Nadu!

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in